நாள்.22.06.2026

**அசல் வழக்கு எண். 123/2003**

**பெயர். மீனா சுந்தரி**

**த.பெ. கலியபெருமாள்**

பி.**வா.சா.2– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதியிக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் 2ம் பிரதிவாதியின் உத்தரவின் பெரில். 2ம் பிரதிவாதி மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். பள்ளி கூடத்தை அப்புரபடுத்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு புல எண் விஸ்திரணம் தெரியுமா என்றால் புல எண் தெரியாது. விஸ்திரணம் 986. எத்தைணை வருடமாக நான் பணிபுரிந்து வருகிறேன் என்றால் பட்டுக்கோடை ஒன்றியத்தில் 2 வருடமாக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விபரங்கள் நேரடியாக தெரியுமா ரெக்கார் மூலமாக தெரியுமா என்றால் ரெக்காடு மூலமாக தெரியும். என்ன என்ன ரெக்காடு என்றால் பள்ளி சம்பந்தமான ரெக்காடு. வழக்கு சொத்தின் உரிமை யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக கமிஸ்னர் அல்லது BDO பெயரில் இருக்கும். எந்த வருடம் பள்ளி கூடம் கட்டப்பட்டது என்றால் 2002 – 2003. அப்ரூவல் வாங்கிதான் பள்ளி கூடம் கட்டப்பட்டது என்றால் ஆமாம். யார் பெயரில் அப்ரூவல் கொடுக்கப்பட்டது என்றால் மாவட்ட ஆட்சியர்.

உரிமையாளர் பெயரில் தான் அப்ரூவல் கொடுட்கக வேண்டும் பள்ளி கூடம் பெயரில் எப்படி அப்ரூவல் வந்தது என்றால் நகராட்சி ஆணையர் பெயரில் அப்ரூவல் உள்ளது மற்றபடி எனக்கு தெரியாது. அப்ரூவல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கட்டுமான பணி தொடங்கியதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யவில்லை அது எந்த ஆவணம் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பள்ளி கூடம் எந்த ஆண்டு கட்ட தொடங்கி எந்த ஆண்டு கட்டுமுடிக்கப்பட்டது என்றால் 2002 – 2003. எந்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்றால் 2002ல் சேர்க்கப்பட்டார்கள் புது கட்டிடம் கட்டிய பிறகு அதில் படித்தார்கள். 2002–2003 ல் கட்டி முடிக்கவில்லை 2004ல் தான் கட்டி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் layout ல் பள்ளிகூடத்திற்காக ஒதுக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆணையர் பள்ளி கூடம் கட்ட உத்தரவு இருந்தது மற்றபடி எனக்கு விபரம் தெரியாது. ஆணையருக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பள்ளி கூடம் கட்ட உத்தரவு வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி நகராட்சி ஆணையருக்கு வழக்கு சொத்தை எழுதிகொடுக்கவில்லை அதனால் நகராட்சி ஆணையர் பள்ளிகூடம் கட்ட எங்களுங்கது கொடுத்த உத்தரவு சரியல்ல என்றால் சரியல்ல. 2ம் பிதிவாதிக்கு எந்த ஒரு உரிமை ஆவணமும் இல்லாமல் தாவா சொத்தில் பள்ளிகூடம் கட்டியுள்ளார்கள் என்றால் உத்தரவின் பேரில்தான் கட்டப்பட்டுள்ளது. அப்ரூவல் வாங்கிகொண்டு பள்ளிகூடம் கட்டவில்லை என்றால் சரியல்ல. அப்ரூவல் வாங்கிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்வது சரியல்ல. நான் தாக்கல் செய்த **பி.வா.சா.ஆ. 6 முதல் 12** ஆவணங்கள் அப்ரூவல் பெற்ற ஆவணம் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்த ஆவணங்கள் உரிமைமூல ஆவணம் கிடையாது. எங்கள் அலுவலத்தில் உள்ள ஆவணம் என்றால் சரியல்ல. பள்ளி கூடத்தின் சத்துணவு திட்டம் 2008 ல் தான் மனு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். சத்துணவு திட்டத்தை பயன்படுத்துவதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 2002– 2003 ல் பள்ளி கூடம் ஆரம்பித்தாக சொல்வது தவறு என்றால் இல்லை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அந்த பள்ளி கூடத்தின் அப்ரூவல் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் ஆனால் அவ்வாறு அப்ரூவல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் எனது அலுவலகத்தில் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் இல்லை முறையான ஆவணங்கள் பெற்று பள்ளிகூடம் ஆரம்பிக்கப்பட்டது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். layout ல் பள்ளிகூடம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்படவில்லை அதனால் வழக்கு சொத்தில் பள்ளிகூடம் கட்டியது தவறு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி வழக்கு சொத்தை ஆணையருக்கு எழுதிகொடுக்கவில்லை தற்போது வரை அவர்பெயரில் தான் உள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. வழக்கு சொத்து வாதிக்கு பத்தியம் உள்ள சொத்து அதில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அதனால் வாதி சொத்தில் கட்டிய பள்ளிகூடத்தை அகற்றி வாதியிடம் வெற்று சுவாதியிடம் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தில் அரசு நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட பணத்தை கொண்டு பள்ளிகூடம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். SSA scheme. 2002 க்கு முன்பே வழக்கு சொத்தில் பள்ளிகூடம் நடந்தது அதன்பிறகு பள்ளிகூடம் கட்டப்பட்டது என்றால் பள்ளிகூடம் கட்டப்படவில்லை ஆனால் கூரை கட்டிடம் கட்டி மாணவர்கள் சேர்ந்து படித்தார்கள். அதன்பிறகுதான் அந்த SSA scheme மூலம் பள்ளிகூடம் கட்டப்பட்டது என்றால் ஆமாம். அதன்பிறகு தொடர்சியாக பள்ளிகூடம் கட்டப்பட்டு மாணவர்கள் தொடர்சியாக படித்துவருகிறார்கள் என்றால் ஆமாம்.

**வாதிதரப்பு மறுவிசாரணை( நீதிமன்றம் அனுமதித்தன்பேரில்)**

எதிர்வழக்குரையிலோ வாக்குமூலத்திலோ 2002 க்கு முன்பாக பள்ளிகூடம் நடந்ததாக சொல்வில்லை என்றால் சரியல்ல. தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2002 முதல் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது நான் பணிக்கு வந்த பிறகுதான் தெரியும் என்றால் சரியல்ல ஆவணங்கள் அடிப்படையில் தெரியும். தற்போது பள்ளிகூடம் நடக்கவில்லை என்றால் சரியல்ல பள்ளிகூடம் நடந்துவருகிறது.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.